செ.வெ.எண்:16 நாள்:06.07.2021

# பத்திரிக்கை செய்தி

## கொரோனா பாதிப்பால் உயிரிழந்த இந்து ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்த குடும்பத்தினருக்கு மான்யத்துடன் கூடிய கடனுதவி.

கரூர் மாவட்டத்தை சார்ந்த அதிதிராவிட மக்கள் கொரோனா / கோவிட் – 19 வைரஸ் பாதிப்புக்குள்ளாகி குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய நபர் இறந்திருப்பின் அவர்களின் குடும்ப வாழ்வாதாரத்தை முன்னேற்றும் வகையில் தேசிய பட்டியலினத்தவர் நிதி மற்றும் மேம்பாட்டுக்கழகம், புதுதில்லி **(NSFDC – National Scheduled Caste Finance and Development Corporation, New Delhi)** வாயிலாக **"ஆஷா" (ASHA)** என்ற திட்டத்தின் கீழ் சுய தொழில் செய்ய மான்யத்துடன் கூடிய கடன் உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டதில் பயன் பெற விரும்பும் ஆதிதிராவிட இனத்தவரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடிய இறந்தவரின் வயது 18 முதல் 60 க்குள் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் சுய வேலைவாய்ப்புக்கான திட்டமதிப்பீடு அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் வரை இருக்கலாம். திட்டத்தொகையில் 80 சதவீதம் அதிகப்பட்சமாக ரூ.4.00 இலட்சம் வரை கடன் **NSFDC** நிறுவனத்தால் வழங்கப்படும் மீதமுள்ள 20% அல்லது ரூ.1.00 இலட்சம் வரை மானியம் வழங்கப்படும் . ஆண்டுக்கு 6.5 சதவீதம் என்ற வட்டி விகிதத்தில் கடனை 6 ஆண்டுகளுக்குள் திரும்ப செலுத்தலாம்.

இந்த திட்டத்தில் பயன் பெற விரும்புவோர் குடும்பத்தில் வருமானம் ஈட்டக்கூடியவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்ததற்கான ஆவணங்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை (04324–296486, 94450 29463) தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.